(ஆ) இராதாபுரம் தொகுதியில் புயலால் ஏற்பட்ட சேதம் குறித்து.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ''17—4—1979 அன்று நெல்லை, இராதாபுரம் தொகுதியில் உள்ள ஆலக்கிணறு திருமலாபுரம் கிராமத்தில் திடீரென புயல் வீசியதால் ஏராளமான வாழை சேதமடைந்ததால் அங்கே நிலவும் பதட்ட நிலை குறித்து.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவரவர்களே, 14-4-79 அன்று தெற்கு கள்ளிக்குளம் அச்சம்பாடு ஆகிய கிராமங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. 17-4-79 அன்று மாலை 4 மணி முதல் 4-30 மணி வரை ஆலங்கிணறு திருமலாபுரத்தில் பலத்த சூறைக் காற்றுடன் மழையும் பெய்தது. பலத்த காற்றின் காரணமாக வாழைப்பயிர் மட்டும் சேதம் அடைந்தது. மற்ற பயிர்களுக்கோ அல்லது குடியிருப்புகளுக்கோ எவ்வித சேதமுமில்லை.

சேதமுற்ற வாழைப் பயிர்கள் அனைத்தும், எட்டு மாதக் கன்றுகள் எனவும், பூப்பூத்துள்ள நிலையில் இருந்தன எனவும் தெரிகிறது. பலன் தருவதற்கு மேலும் இரண்டு மாத காலம் பிடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதமுள்ள வாழைகள் அனைத்தும் புஞ்சை நிலத்தில் கிணற்றிறவையின் மூலமே சாகுபடி செய்யப்பட்டவை. வாழை ஒவ்வொன்றும், இரண்டு மாத காலத்திற்கு பிறகு மகசூலுக்கு வந்தால் குறைந்தது ரூ. 12/-க்கு மேல் பெறுமானமுடையது. அவற்றினை சாகுபடி செய்தலுக்கு ஆலங்கிணறு திருமலாபுரம் கிராம விவசாயிகள் வாழை ஒன்றுக்கு ரூ. 8 முதல் ரூ. 10 வரை செலவிட்டதாகவும் அருகிலுள்ள கள்ளிக்குளம் கிராம விவசாயிகள் வாழை ஒன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 7 வரை செலவிட்டதாகவும் கூறுகின்றனர்.

62 விவசாயிகளுக்குச் சொந்தமான 57.09 ஏக்கர் நிலப் பரப்பில் சாகுபடி செய்த 30,465 வாழைகள் சேதமுற்றன. சேதத்தின் மதிப்பீடு சுமார் ரூ. 2,71,050 என்று கணக்கிடப் பட்டுள்ளது.

தெற்கு கள்ளிக்குளம், அச்சம்பாடு கிராமத்தில் விவசாயிகள் வசதி படைத்தவர்கள். ஆனால், ஆலங்கிணறு திருமலாபுரம் கிராம விவசாயிகளில் பெரும்பாலோர் சிறு விவசாயிகள். முற்றிலும் விவசாய வருமானத்தையே நம்பியுள்ளார்கள், அவர்கள் அனைவரும் கிராம விவசாய வங்கியிலும் நில அடமான வங்கிகளிலும் முன் பணம் கடன் வாங்கியே விவசாயம் செய்துள்ளனர்.

[திரு. பி. முசிறிப்புத்தன்] [1979 எப்ரல் 30

ஆலங்கிணறு திருமலாபுரம் மற்றும் அருகிலுள்ள கிராமத்து வாழை சாகுபடி செய்த விவசாயிகள் அவர்களால் வங்கியில் பெறப்பட்டுள்ள குறைந்த காலக் கடன்களை, நீடித்த காலத் தவணை முறைக்கடன்களாக மாற்றித் தர வேண்டுமென்றும், சேதமுற்ற பயிர்களை மீண்டும் சாகுபடி செய்தலுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் புதிய கடன் தரவேண்டுமென்றும் கோரியுள்ளார்கள். மேலும் ஏற்பட்டுள்ள சேதத்திற்கு தக்க நிவாரண தொகையும் கோரியுள்ளார்கள்.

நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர், ஏற்பட்டுள்ள சேதத்திற்கு தக்க நிவாரணத் தொகை வழங்குவதற்கும், விவசாயிகள் வாழை சாகுபடிக்கு என பெறப் பெற்றுள்ள கூட்டுறவு வங்கி குறைந்த கால கடன்களை நீண்ட கால தவணைக் கடன்களாக மாற்றி ஆணைகள் பிறப்பிக்கவும், வாழைப் பயிர் புதிதாக மீண்டும் சாகுபடி செய்வதற்கு கூட்டுறவு வங்கிகள் மீண்டும் கடன்கள் வழங்குவதற்கும் ஆணைகள் பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுள்ளார். இச்செயற்குறிப்பு 25—4—79 அன்றுதான் அரசுக்கு கிடைத்தது. இதனை அரசு விரைவில் ஆய்வு செய்து தக்க ஆணைகளை வெளியிடும்.

[முற்பகல் 10-00]

திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, 12 ரூபாய்க்கு மதிப்பிட்டிருப்பதாக சொல்லுகிறார்கள். இப்படிப் பட்ட தவறான தகவல்களை அதிகாரிகள் அமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் தந்திருக்கின்றார்கள் என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்கு . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது 12 ஆயிரமா அல்லது ரூபாய் பன்னிரண்டா?

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்): தாருக்கு 12 ரூபாய். .

திரு. யா. சை. மு. யூசுப் : இப்படி தவறான தகவலை தந்திருக்கிறார்கள். அங்கு பெரிய நிகழ்ச்சிகள் நடந்த போதிலும் ஆலங்கிணறு திருமலாபுரம் அங்கிருக்கின்ற கிராம முனிசீப் அரசுக்கு விரோதமாக—மோசமாகப் பேசிக்கொண்டும் இருக்கிறார். இதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ? மேலும் நிவாரணம் தரப்பட்டிருக்கின்ற நேரத்தில் மானியத் தொகை தந்ததாகத் தெரியவில்லை. நாகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்ட நேரத்தில் மானியம் தரப்பட்டிருக்கிறது. அதே

1979 ஏப்ரல் 30] [திரு. யா. சை. மு. யூசுப்]

போன்று எங்கள் தொகுதி மக்களுக்கும் மானியத் தொகை கொடுத்தால் நான் கடமைப்பட்டவனாக இருப்பேன். மேலும் இந்த நிவாரண உதவி தந்ததற்கு இந்த அரசுக்கு ஆலங்கிணறு திருமலாபுரம் மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். இதுபோன்ற பெரிய நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அதற்கான ஆதாரங்களை வைத்திருக்கிறேன். அந்த ஆதாரத் தையும் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் கதையையும் இந்த மனுவின் வாயிலாகவும், புகைப்படங்களின் வாயிலாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் செயலரிடம் தருகிறேன்,

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, அரசுக்கு வந்த தகவலில் இரண்டு மாதங் களுக்குப் பிறகு இது 12 ரூபாய்க்கு விற்கும் என்றும் சாகுபடி செய்வதற்கு ஆலங்கிணறு திருமலாபுரம் கிராமத்திற்கு ஒரு வாழைக்கு 8 முதல் 10 ரூபாய் செலவிட்டிருப்பதாகவும், கள்ளிக்குளம் கிராமத்தில் 5 முதல் 7 ரூபாய் வரை செல விட்டிருப்பதாகவும் அவர்களே ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். மேலும் இங்கு தரப்பட்ட தகவல் தவறு என்றிருக்குமானால் அதைப்பற்றி குறிப்பிட்டு உறுப்பினர் அவர்கள் நிரூபிப்பா ரானால் அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) சென்னை ஓட்டலதிபர்கள் பலகாரங்கள் விலையை உயர்த்த அறிவிப்பு கொடுத்திருப்பது குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, சென்னையி லுள்ள ஓட்டல் அதிபர்கள் பலகாரங்கள் விலையை உயர்த்து வோம் என அறிவித்துள்ளதால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது குறித்து அவையில் ஒரு அறிக்கைவைக்க அனுமதி கோருகிறேன்.

உணவு விடுதிகளில் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் விலை ஏறி வருவதைக் குறித்து பொது மக்களிடமிருந்து தொடர்ந்து முறையீடுகள் வந்ததினாலும், விலைகளைக் குறைக்க வேண்டுமென்று உணவு விடுதிகளின் சொந்தக்காரர் களை அரசு கேட்டுக்கொண்ட முயற்சிகள் பலனளிக்காததாலும் ஏழை எளிய நடுத்தர வகுப்பு மக்களால் பொதுவாக நுகரப் படும் ஒன்பது உணவுப் பண்டங்களுக்கும் ஜனதா சாப்